சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 10 | 28-07-2011

## 21-07-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : இயங்கியல் பொருள்முதல்வாதம்

இதில் இரண்டு விடயங்கள் உள்ளடங்கி இருகின்றன.

1. இயங்கியல் - Dialectics
2. பொருள்முதல்வாதம் - Materialism

இயங்கியல் என்றால் என்ன?

பண்டைக் காலத்தில் எதிர்வாதத்தில் காணப்படும் முரண்களைக் கண்டு அகற்றுவதன் மூலம் உண்மைகளைக் கண்டறிதல் எனக் கொள்ளப்பட்டது. Dialectics (இயங்கியல்) என்பதன் மூலச் சொல் Dialego என்னும் கிரேக்கச் சொல்வழிவந்ததாகும்.சிந்தனைகளில் உண்மையைக் கண்டறிவதற்காக கையாளப்பட்டது.

இயற்கைத் தோற்றங்கள் எப்போதும் இடையறாது இயங்கிக்கொண்டிருக்கும். அதன்மூலம் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருகின்றன. மேலும் இயற்கையின் உள்ளே காணப்படும் முரண்பாடுகளின் வளர்ச்சி காரணமாகவும் நேர் எதிரான சக்திகள் மோதிக் கொண்டு இயங்குவதன் விளைவாகவும் இயற்கை வளர்ச்சி அடைகிறது என இயங்கியல் அணுகுமுறை கருதுகிறது.

இந்த இயங்கியல் அணுகுமுறை Metaphysics எனப்படும் மாறாநிலைத் தத்துவத்திற்கு நேர் எதிர் தத்துவமாக வளர்ச்சி பெற்ற ஒன்றாகும்.

இயங்கியல் அணுகுமுறையை ஹெகல் என்னும் ஆசிரியரிடம் இருந்து மார்க்சும் ஏங்கேல்சும் பெற்றுக்கொண்ட போதும் அதனை நவீன விஞ்ஞானப் பகுப்பாய்வு மூலமாக ஹெகலின் இயங்கியல் அணுகுமுறைக்கு அப்பால் வளர்த்தெடுத்தமைதான் முக்கியமானாதாகும். ஏன் எனில் ஹெகலின் இயங்கியல் அணுகுமுறையில் கருத்துமுதல்வாதம் காணப்பட்டது.
ஹெகல் அணுகுமுறையில், சிந்தனையின் இயக்கமே யதார்த்த உலகைப் படைக்கிறது என்றும் யதார்த்த உலகம் என்பதே கருத்தின் வெளித்தோற்றம் எனப்படுவது என்றும் ஹெகல் கூறுகிறார்.

மார்க்ஸ் அணுகுமுறையில் "பொருள் சார்ந்த உலகை (Materialistic World) மனித மூளை பிரதிபலித்த கருத்துக்களாக மாற்றுகிறது. கருத்து என்பது பொருள் சார்ந்து உலகின் பிம்பமே தவிர வேறு எதுவும் இல்லை" என்று மார்க்ஸ் கூறுகிறார்.

இயற்கையில் காணப்படும் பொருட்களும் அவற்றின் தோற்றங்களும் தற்செயலானவை என்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு இன்றியும் ஒன்றிலிருந்து மற்றது பிரிந்தும் இருக்கிறது என்றும் ஒன்றை ஒன்று சாராது சுயேட்சையாக இருந்துவருவதாகவும் மாறாநிலைத் தத்துவம் எடுத்துரைக்கிறது.


இதற்கு மாறாக இயற்கைப் பொருட்களும் அவற்றின் தோற்றங்களும் ஒன்றோடு ஒன்று பிணைந்திருக்கிறது என்றும் முழுமைத்தன்மை உடையன என்றும், ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கிறது என்றும் ஒன்றின் தன்மையை இன்னொன்றின் தன்மை நிர்ணயிக்கும்படி உள்ளன என்றும் இயங்கியல் தத்துவம் கூறுகிறது.
எனவே இயற்கையின் தோற்றம் எதையும் தனித்தனியே பிரித்து ஆராய்வதால் அதனைப் புரிந்துகொள்ள முடியாது. ஆதலால் எந்த ஒரு பொருளையும் அதன் தோற்றத்தையும் ஆராயும் போது அவற்றின் இடைத்தொடர்புகளையும் ஆராய்தல் வேண்டும்.

இயற்கை என்பது இடையறாது இயங்கிக்கொண்டிருக்கிறது. மாறிக்கொண்டிருக்கிறது. இடையறாது தன்னைத்தானே புதுப்பித்துக்கொண்டிருக்கிறது. இயற்கையில் ஏதாவது ஒன்று நொறுங்கிச் சிதைந்து அழிந்துகொண்டிருக்கிறது என்றும் ஏதாவது ஒன்று புதிதாக பிறந்து கொண்டும் இருக்கிறது என இயங்கியல் கருதிக்கொள்கிறது.

எனவே பல்வேறு தோற்றங்களைப் பற்றி ஆராயும் போது அவற்றுக்கு இடையில் நிலவும் பரஸ்பர தொடர்புகளையும் (Inter Connections) பரஸ்பர சார்பு நிலைகளையும் (Inter Dependence ) வைத்து பரிசீலித்தால் மட்டும் போதாது. அத் தோற்றங்களின் இயங்கும் தன்மை,மாறும் தன்மை,வளரும் தன்மை, தோன்றும் தன்மை, மறையும் தன்மை ஆகியவற்றையும் சேர்த்து ஆராய வேண்டும்.

"சிறிய நுட்பமான பொருள் முதலாக மிகப்பெரிய பொருள் ஈறாக, சிறு மணல் துகள் முதலாக சூரியன் ஈறாக, உயிரணு முதல் மனிதன் வரை, இயற்கையில் உள்ள எல்லாப் பொருட்களும் இடையறாது தோன்றி,வளர்ந்து,மறைந்து கொண்டேயிருக்கிறது. இடையறாது இயங்கிவரும் நிலையிலும் மாறிக்கொண்டே இருக்கும் நிலையிலும் உள்ளது." -(எங்கெல்ஸ் -இயற்கையின் இயங்கியல்)

(மிகுதி அடுத்த பக்கம்)



கறுப்பு ஜூலை (ஆடிக்கலவரம்)
ஜூலை 23, 1983

இன்று இந்த இலங்கை மண்ணில்
ஹட்லரின் சொற்கள் உயிர்த்துத் தங்கள்
நிழலுரு நீங்கி நிஜங்களாவன
அக்னி தோய்த்து எழுதிய சொல்லாய்
எரியும் கடைகள் வீடுகள் மனிதர்

வெட்டுவாள்களும் வெடித்துவக்குகளும்
வரிக்குவரி கீழ்ச்செங் கோடிடுவன

இந்த மண்ணில்
தமிழர்வாழும் ஒவ்வொரு தெருவிலும்
வீடு தோட்டம் பள்ளிக்கூடம்
பல்கலைக்கழகம், பணிமனை, கோயில்
பெருஞ்சிறைக் கூடம் - ஒவ்வோரிடத்தும்
குருதியும் தசையும் நிணமும் எலும்பும்

தோலும் மயிரும் தாளாய் விரியும்
வாளும் துவக்கும் தீவட்டிகளும்
இனவெறி உந்தும் ஆயிரம் கைகள்
ஏந்த அழுத்தி எழுதிச் செல்லும்

திரையின் மறைவில் இருந்து இயக்கி
எரிகிற வீட்டில் விறகு பொறுக்கும்
அரசு, முதலைக் கண்ணீர் உகுக்கும்
அல்லது புண்ணில் முள்ளால் செதுக்கும்.

-சி. சிவசேகரம்

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகமும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்ச்சித்திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

இயங்கியல் பொருள்முதல்வாதம் முன் பக்கத் தொடர்ச்சி..

வளர்ச்சி என்பது அதன் போக்கில் எண்ணிக்கையில் இருந்து குணாம்சமாக மாறும் போக்கேயாகும். புலனுக்கு எட்டாதபடி படிப்படியாக, சிறுகச் சிறுக அளவில் ஏற்படும் மாறுதல்கள் அத்தனையும் திரண்டு ஒரு பாச்சலாகவே இடம் பெறுகின்றன. இதுவே வளர்ச்சியின் போக்கு என்பதாகவும்.

இவ்வளர்ச்சி சுற்றிச் சுற்றி ஒரே வட்டத்தில் நிகழ்வதில்லை. புதிய படிநிலைகளில் மேலே மேலே முன்னோக்கிச் செல்வதாகவே இவ்வளர்ச்சி அமைந்திருக்கிறது. பழைய குணநிலைக்குச் செல்வதாகவே காணப்படும். எளிமையான நிலையிலிருந்து சிக்கலான நிலைக்கும் மாறிச் செல்வதாகவும் வளர்ச்சியின் போக்கைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.எனவே அளவு அல்லது எண்ணிக்கை மாற்றம் குணாம்ச நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை இயங்கியல் சுட்டிக் காட்டுகிறது.

எண்ணிக்கை அல்லது அளவில் ஏற்படும் மாற்றம் வளர்ச்சி என்றால் அந்த வளர்சிக்குள் நேரெதிரான சக்திகளிடையே இடம் பெறும் போராட்டம்தான் வளர்ச்சியின் உள்ளடக்கம் என்பதாகும். "வளர்ச்சி என்பது எதிர்மறைகளினிடையே நடைபெறும் போராட்டத்தையே குறிக்கிறது" என்றார் லெனின்.
இயற்கையில் காணும் சகல பொருட்களினதும் இயக்கப் போக்கில் காணப்படும் நேரெதிரான சக்திகளின் போராட்டமே இயக்கத்தையும் வளர்ச்சியையும் கொடுக்கிறது. இதனை தனது முரண்பாடுகள் என்னும் கட்டுரையில் தோழர் மாவோ மிகவும் விரிவாகவும் எளிமையாகவும் விளக்குகிறார். "முரண்பாடும் போராட்டமும் சர்வ வியபகமானவையாகும்" எனக் கூறுகிறார்.

அவ்வாறு நோக்கும் போது சமூக வளர்ச்சியின் இதே இயங்கியல் அணுகுமுறையை கையாண்டு நோக்கும் போதே மார்க்சும் ஏங்கெல்சும் " சமூக வளர்ச்சிக்கு வர்க்கங்களிடையேயான முரண்பாடும் போராட்டமும் அடிப்படையானது" எனத் தமது கண்டுபிடிப்பை நிறுவினர். ஆதலினால் "மனிதகுல வரலாறு என்பது வர்கங்களிடையேயான போரடத்தின் வரலாறு" என்று கண்டனர்.
மார்க்ஸ்சிசம் பிரபஞ்சத்தின் இயற்கை இயற்கை விளைவித்த அனைத்தும் இயங்கியல் வழியிலான விஞ்ஞான அடிப்படைகளை ஆராய்வதை வற்புறுத்தியது. எனவே பிரபஞ்சம் இடையறாது இயங்கிக்கொண்டிருக்கிறது என்ற இயங்கியல் விஞ்ஞான முடிவை நாம் ஏற்போமானால் பூவுலகின் தோற்றமும் வளர்ச்சியும் மாற்றங்களின் ஊடாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது என்றால் மனிதகுலத்தின் சமூக வளர்ச்சி என்பதும் மாற்றம்பெற்று வந்திருப்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

பழையன கழிவதும் புதியன தோன்றுவதும் இயங்கியலின் அடிப்படையைக் காண உதவும். ஏன்? எதற்கு? எப்படி? எதற்காக? என்ற கேள்வியை எழுப்பினால் அதற்கு " "நிலையாமை தத்துவம்" அல்லது "மாறாநிலைத் தத்துவம்" கருத்துமுதல்வாதம் என்பனவற்றின் ஊடாகவே அப்பாற்பட்ட சக்தி எனப் பதில் கூறுவர். ஆனால் இயங்கியல் முறையானது விஞ்ஞானபூர்வ அடிப்படையில் தோற்றம், வளர்ச்சி,முதிர்ச்சி, மறைவு, புதியன தோன்றல் என்றவாறான பதிலை வழங்கும். இடம் காலம் சூழல் போன்றவை இவற்றைச் சாத்தியமாக்கும். இவை சமூக வளர்ச்சிக்கும் முற்றிலும் பொருத்தமானதேயாகும்.

பொருள்முதல்வாதம்

1. சிந்தனைக்கும் வாழ்வுக்கும் உள்ள உறவு என்ன?
2. ஆத்மாவிற்கும் இயற்கைக்கும் உள்ள உறவு என்ன?

இவ்விரண்டு கேள்விகள் தத்துவாதிகளை இரண்டு முகாம்களா பிரித்தது.

ஆத்மா முதலிடம் வகிக்கிறது. இயற்கையை இரண்டாம் இடத்தில் வைத்து நோக்கப்பட வேண்டும் என்றவர்கள் கருதுமுதல்வாத தத்துவப் பிரிவில் அடங்குவர்.
இயற்கைதான் மூலாதரமானது எனக் கருதிய எல்லோரும் பொருள்முதல்வாதத்தின் பல்வேறு பிரிவுகளை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

2. பொருள்தான் உணர்வை சிந்தனையைப் படைக்கிறது.உணர்வு பொருளைப் படைப்பதில்லை. மனித உடலின் உயர்ந்த பொருள்தான் மூளை அந்த மூளைதான் உணர்வை சிந்தனையைப் படைக்கிறது.

" நமது ஐம்புலன்களையும் தாக்கி இயங்க வைத்து உணர்ச்சியை சிருஷ்டிப்பது எதுவோ அதுவே பொருள் என்பது.உணர்ச்சியின் வாயிலாக நுகர்ந்து பெறப்படும் புற உண்மையே பொருள் என்படும்.பொருள், இயற்கை,வாழ்வு, பௌதீகம் சம்பந்தமானவை- இவைதான் மூலமும் முதலும், ஆத்மா, உணர்வு,உணர்ச்சி மனம் சம்பந்தமானவை இரண்டாம்பட்சமானவை. எப்படி பொருள் இயங்குகிறது, எப்படிப் பொருள் சிந்திக்கிறது என்பதைக் காட்டும் சித்திரமே பிரபஞ்சமாகும்."- லெனின்

## அவுஸ்திரேலியாவில் தமிழரும் தமிழும்

*28-07-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - மாவை நித்தியானந்தன்*

வாழ்க்கை :

சராசரி அவுஸ்ரேலியர்களைவிட தமிழர் கல்வித்தகைமையில் மேம்பட்டவர்களாக உள்ளனர்.

புலம்பெயர்ந்த காலப்பகுதியைப் பொறுத்து வாழ்வம்சங்களில் வேறுபாட்டைக் காணலாம்.

பின்தங்கிய அரசியல் நிலைப்பாடுகளும், ஆதிக்கமும் உள்ளது.

தமிழில் ஊடகத் துறை சீரழிந்துள்ளது.

சமயம் சார் நடவடிக்கைகளில் தீவிரம் கர்ணப்படுகின்றது.

குழந்தைகளுக்குத் தமிழ் கற்பதில் குறிப்பிடத்தக்க ஆர்வம் உள்ளது. இது பரதம், மிருதங்கம் போன்றவற்றுடன் போட்டி போடும் நிலை காணப்படுகின்றது.
அரங்கேற்றக் கலாச்சாரம் துரித கதியில் வளர்ந்து வருகின்றது.

பிள்ளைகள் எதிர்நோக்கும் தனித்துவமான பிரச்சினைகளும், தலைமுறை இடைவெளியும். (இலங்கையைவிட வேறுபட்டவை)

இலக்கியம் எழுத்து ஆகிய துறைச்செயற்பாடுகள் பற்றித் தவறான பதிவுகள் வெளிநாடுகளில் வெளிவருகின்றன.

பிஞ்சிலே பழுக்கும் நிலையும் அதேவேளை பிரபலம் தேடும் ஆசையும் இருக்கும் அளவுக்கு புதிய விடயங்களைக் கற்பதிலும் சிந்திப்பதிலும் ஆர்வமில்லை.

# பாடிப்பறை

13 - 08 - 2011

முழுமதி நாளில் கவிதையின் தூறல்

**உரை**
**"ஈழத்துக் கவிதையில் பெண்ணியம் " - ஔவை**

**கவியாற்றுகை**
**கவிஞர் நீலாவணனின் "துயில்" - வே வாசுகி**

**சுப்பிரமணிய பாரதியின் "பரசிவ வெள்ளம்" - லோ. நிலா**

**கவியரங்கம்**
**"பிரிவென்பது"**

**காலை 10.00 - 11.30 வரை.**
**தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில்**

**சமூக விஞ்ஞான வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**